
நீதிமான் பனைமரத்தைப் போல செழிப்பான்
The Righteous Shall Flourish Like the Palm Tree
Album 23 Song 6 | ஆல்பம் 23 பாடல் 6

நீதிமான் பனை மரத்தைப்போல — சங் 92:12

November

23

Friday

௯௨ சங்கீதம்

நீதிமான் பனைமரத்தைப் போல செழிப்பான்
லீபனோனின் கேதுருவைப்போல வளருவான்
கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள்
தேவனின் பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்

கர்த்தர் உத்தமர் எந்தன் கன்மலை
அநீதி அவரிடத்தில் ஒன்றுமே இருந்ததில்லை

நீதிமான் முதிர்வயதிலும் கனியைத் தந்திடுவான்
புஷ்டியும் பசுமையுமாய் இருந்திடுவான்
கர்த்தரின் கிரியைகள் மகத்துவமானவைகள்
அவரின் யோசனைகள் மகா ஆழமானவைகள்

KJC-DNN

நீதிமான்களின் கொம்பை உயர்த்துகின்றவரே
என் கொம்பையும் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்தினீர்
புதிதாய் புது எண்ணெயால் அபிஷேகம் செய்கிறீர்
நீரே என்றென்றைக்கும் உன்னதராய் இருக்கிறீர்

காலையில் உம் கிருபையையும் இரவிலே உம் சத்தியத்தையும்
அறிவித்திடுவதே நலமாயிருக்குமே
கர்த்தரைத் துதிப்பதும் கீர்த்தனம் பண்ணுவதும்
கர்த்தருக்கு பிரியமாய் இருந்திடுமே

துன்மார்க்கன் புல்லைப்போல உலர்ந்து போயிடுவான்
இவற்றை என் காதுகள் இரண்டும் கேட்டிடுமே
சத்துருக்கள் யாவரும் சிதறுண்டு போவார்கள்
இவற்றை என் கண்கள் இரண்டும் கண்டிடுமே

மிருக குணமுள்ளவன் கர்த்தரை அறியமாட்டான்
பேதை தேவனின் மகிமை உணரமாட்டான்

அக்கிரமம் பிசைப்பவன் அழிந்து போயிடுவான்
எல்லாரும் அழிந்து ஏன் பெருக வேண்டும் ?

KJC-DNN